18.09.2025

OS. No. 170/2013

**DW.1 – ஆண்டி**

**<u>வாதி தரப்பு குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி</u>** :–

தாட்கோவால் நடத்தப்பட்ட வகுப்பு முழு நேர வகுப்பு தான் என்றாலும், பகுதி நேர வகுப்பு இல்லை என்றாலும் சரியல்ல. பகுதி நேர வகுப்பு நடந்ததற்கான ஆவணம் உள்ளதா என்றால் வருகை பதிவேட்டில் அதிகாரிகள் கையொப்பமிட்டுள்ளார்கள். அந்த ஆவணம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டதா என்றால் ஞாபகமில்லை, தேவைப்பட்டால் தாக்கல் செய்கிறேன். தாட்கோ பயிற்சி பெறுபவர்கள் ஏற்கனவே படித்து வேலை கிடைக்காத நபர்கள் என்பதால் அவர்கள் முழு நேரமும் அங்கே தங்கி அவர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது என்றாலும், எனவே நான் சொல்வதுபோல் அது பகுதி நேர வகுப்பாக இருக்க வாய்ப்பில்லை என்றாலும் சரியல்ல. மாணவர்களுக்கு அரசாங்கம் கொடுத்த பணத்தை மாணவர்கள் எவ்வாறு எங்களுக்கு செலுத்தினார்கள் என்றால் மாணவர்களுக்கு அரசு கொடுத்த பணம் அவர்களுடையது, அவர்கள் எங்களுக்கு செலுத்தவேண்டிய அவசியமில்லை. நான் மாணவர்களிடமிருந்து பணம் வாங்கினேன் என்றாலும், பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. பாலிடெக்னிக் மாணவர்கள் பாலிடெக்னிக் படிக்கும்போதே அதே கல்வி ஆண்டில் கேட்டரிங் படித்ததாக சொல்லி ஒரு விசாரணை நடந்தது என்றால் சரிதான். அவ்வாறு செய்தது அறங்காவலர்களில் ஒருவரான பிரபு என்பவர் சொல்லி பாலிடெக்னிக் கல்லூரி முதல்வரும், கேட்டரிங் கல்லூரி முதல்வரும் அவ்வாறு செய்தார்கள், அது தெரிந்தவுடன் Schalarship வேண்டாம் என்று சொல்லிவிட்டோம். முறைகேடு தெரிந்துவிடும் என்பதால்தான் Schalarship வேண்டாம் என்று சொல்லிவிட்டோம் என்று சொன்னால் சரியல்ல. முறைகேடு சம்பந்தமாக சம்பந்தப்பட்டவர்கள் மீது நடவடிக்கை எடுத்தேனா என்றால் எடுத்தேன், முதல்வர்களை பணியில் இருந்து நீக்கிவிட்டோம். மாணவர்களிடமிருந்து வசூல் செய்த பணத்தை திருப்பி கொடுத்தோமா என்றால் மாணவர்களிடமிருந்து பணம் பெறவில்லை. இமயம் பொறியியல் கல்லூரியை இடமாற்றம் செய்தது சம்பந்தமாகவும், அதற்கு கட்டிடம் இல்லை என்ற விவரத்தையும் ./

மறைத்ததற்காக அந்த கல்லூரி செயல்படுவதை தடை செய்தார்களா என்றால் தடை செய்திருந்தார்கள். அந்த தடை உத்தரவிற்கு எதிராக மாண்புமிகு உயர்நீதிமன்றத்தில் Writ மனு தாக்கல் செய்திருந்தோம் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. Writ மனு எங்களுக்கு எதிராக தீர்ப்பான காரணத்தினால் அதற்கு எதிராக மேல்முறையீடு செய்தோம் என்றால் சரிதான். கட்டிடத்திற்கு பஞ்சாயத்து அப்ரூவல் பெற்றதாக பொய் சொல்லி அந்த உத்தரவு பெற்றோம் என்றால் சரியல்ல. பொறியியல் கல்லூரிக்கு கட்டிடமே இல்லாமல் மானியங்கள் வாங்கியுள்ளோம் என்றால் தெரியாது. அவ்வாறு மானியங்கள் பெறப்பட்டது சம்பந்தமாக வா.சா.ஆ.4 ல் பக்கம் எண்.114, 150, 189 ஆகிய பக்கத்தில் உள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. அந்த பக்கத்தில் போடப்பட்டுள்ள கையொப்பம் என்னுடையதுதான். நான் அரசாங்கத்திடமிருந்து மானியம் பெற்றுக் கொண்டு அதை சொந்த உபயோகத்திற்கு பயன்படுத்தினேன் என்றால் சரியல்ல. அறக்கட்டளையினுடைய நிர்வாக குழு நிறைவேற்றிய தீர்மானங்கள் தான் என்னிடம் காட்டப்படும் ஆவணமாகும். அது **வா.சா.ஆ.**37. நாங்கள் சட்ட விரோதமாக அறக்கட்டளையின் சொத்தை சொந்த உபயோகத்திற்கு பாதைக்காக மாற்றியுள்ளோம் என்றால் சரியல்ல, வா.சா.ஆ.37 ல் அதற்கான தீர்மானம் உள்ளது என்றால் சரியல்ல.

**(வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுங்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது)**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்குநர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு, சாட்சியிடம் படித்து காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

CHRISTOPHER M
Digitally signed by CHRISTOPHER M
Date: 2025.09.18 18:36:33 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,
திருச்சிராப்பள்ளி.